2003 மார்ச் 24]

55—

சோடியம் ஆவி விளக்கு.

•10214—திரு. சி. சண்முகம்:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர் தேர்வுநிலை பேரூராட்சிப் பகுதிகளில் சோடியம் ஆவி விளக்கு பொருத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படத் தொடங்கும்?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர் தேர்வு நிலை பேரூராட்சிப் பகுதிகளில் போதுமான அளவு சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளதால், மேலும் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தும் அவசியம் எழவில்லை.

திரு. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநின்றவூர் பகுதியானது ஒரு பாடல்பெற்ற ஸ்தலமாகும். அந்தப் பகுதியிலே அரசு அங்கீகாரம் இல்லாத வீடுகள் அதிகமாக உள்ளதால், ஏழைகளின் வீடுகள் அதிகமாக உள்ளதால், அந்த வீடுகளுக்கு மின்சாரத் தொடர்பு இல்லை. அவர்களது பிள்ளைகளுக்கு படிக்க வசதி இல்லை. தெரு விளக்குகள் அந்தப் பகுதிகளில் அமைக்கப்படவில்லை. ஆதலால், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலோ அல்லது அரசாங்கமோ அவர்களுக்கு குழல் விளக்கோ, தெரு விளக்கோ, சமுதாயக் கூடமோ, படிப்பகமோ அந்தப் பகுதிகளில் ஏற்பாடு செய்து கொடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28 வார்டுகளில், 30,000 பொதுமக்களை உள்ளடக்கிய திருநின்றவூர் தேர்வுநிலை பேரூராட்சியில் தற்போது 190 சோடியம் ஆவி விளக்குகள் உள்ளன. மேலும், 1,147 குழல் விளக்குகள் உள்ளன. கூடுதலாக சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதைவிட, இதுவே போதுமானதாகும்.

மேலும், சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதால் பேரூராட்சிக்கு மின் கட்டணம் மற்றும் பராமரிப்புக் கட்டணமும் கூடுதலாகும். பேரூராட்சியில் தற்போது போதுமான நிதி வசதியும் இல்லை. எனவே, இப்பேரூராட்சியில் கூடுதல் சோடியம் ஆவி விளக்குகளோ, குழல் விளக்குகளோ அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. அன்பழகன்.

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகராயநகர் பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள உயர்கோபுர சோடியம் ஆவி விளக்கு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்பழகன். இது திருநின்றவூர்.

வினா எண் 56, திரு. த. ஆறுமுகம். மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

56—

நச்சுக் காற்றைத் தடுத்தல்

•18991—திரு. த. ஆறுமுகம்:

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மண்டலம்-I மற்றும் 2 பகுதிகளுக்குட்பட்ட எம்.ஆர்.நகர், ஆர்.ஆர்.நகர் மற்றும் கொடுங்கையூர் பகுதிகளைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சுக் காற்றை சுவாசிப்பதால் மூச்சுத் திணறல் ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அங்கு வசிக்கும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட